2016 *பிப்ரவரி* 20]

முன்னதாகவே ஆணை பிறப்பிக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வாழும் மனித தெய்வம், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, தங்கள் வாயிலாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

புதிய கட்டடம்

***35558—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தொகுதியில் பழமையான வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழாய் ஒளிர்ந்து, மூவேந்தராய்த் திகழ்ந்து, அவ்வைத் தாயின் அறநெறியில் வாழ்ந்து, தமிழர்களின் நெஞ்சமெல்லாம்*

தழைத்தோங்கும் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) உழவர்களின் உரிமைகளைக் காத்தாய் தாயே, தொழிலாளர்களின் துயர் துடைத்தாய் தாயே, மாணவர்களின் மனம் நிறைந்தாய் தாயே, அரசு ஊழியர்களின் அகத்தினைக் குளிர வைத்தாய் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு தலைவணங்கும் தாயே, தத்துவப் பேரொளியே, தமிழர்களின் தனிப்பெரும் தாயே, நிலையான உங்கள் மக்களாட்சி என்றும் இருக்க தமிழ்நாடே திரண்டுவிட்டது அம்மா, தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைந்துள்ளது. பழுதடைந்த நிலையிலுள்ள அந்தக் கட்டடத்தை அப்புறப்படுத்தி, புதிய கட்டடம் அமைப்பதில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் மூலமாக நீதிமன்றத் தடையாணை பெறப்பட்டுள்ளது. அக்கட்டடம் அமைந்துள்ள சர்வே எண் 510/1A–ல் 1.22.5 ஹெக்டர், கிராம நத்தம் நிலம் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பொன். ராஜா: அதிலே, நீதிமன்றங்கள், கிளைச் சிறைகள், காவல் நிலையங்கள் மற்றும் சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் போக, மீதம் 50 செண்ட் இடம் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, உரையை முடியுங்கள்.

திரு. பொன். ராஜா: காலியாக உள்ள அந்த இடத்திலே வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகப் பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரியில் ஏற்கெனவே உள்ள பழமையான வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை

2016 பிப்ரவரி 20]

இடித்துவிட்டு, புதிய ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது தொடர்பாக, அக்கட்டடத்தில் உள்ள இதர துறை அலுவலகங்களின் மாவட்ட அளவிலான துறை அலுவலகங்களின் கருத்து கோரப்பட்டுள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 140 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடம் என்பதால் அதனை இடிப்பது தொடர்பாக, தொல்பொருள் துறையின் தடையில்லாச் சான்று கோரப்பட்டுள்ளது. அது வரப்பெற்ற பின்னர், மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***36192—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகமலை ஒன்றியம், ஆர்.டி. மலையில் தனியாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகமலை ஒன்றியம், ஆர்.டி. மலை அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்கிட அரசாணை எண் 66, பள்ளிக் கல்வித் துறை, நாள் 21–5–2014–ல் ஆணை வெளியிடப்பட்டு,